குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்

எஸ்.டி.சி. எண். 02/2020

**PW**1-சீனிவாசன்    த/பெ. ராஜு

தேதி- 15.03.2021

பக்க எண்- 1

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை

(சி.எம்.பி. மனுக்கள்  39/202 மற்றும் 38/2021 மனுக்கள்  அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 09/2020 மற்றும் 02/2020 இணைந்து விசாரிக்கப்படுகிறது. )

எங்கள் குடும்பம்  மூன்று  தலைமுறைகளாக தீவட்டிபட்டியில் குடியிருந்து வருகிறது. நான் எந்த விதமான வம்பு வழக்குகளுக்கும் செல்லமாட்டேன். எனக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை. என் மேல் போலிஸ் புகார் ஏதும் இல்லை. காலாவதியான தொகையை கேட்க முடியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது இரண்டு வழக்குகளிலும், எதிரி கொடுக்கவேண்டியதாக கூறப்பட்டுள்ள கூட்டு தொகை ரூபாய் 19,54,560.00 ஆகும். எஸ்.டி.சி எண். 09/2020 இல் காசோலை தொகை ரூபாய் பத்து லட்சம், எஸ்டிசி எண். 02/2020 இல் காசோலை தொகை ரூபாய் ஒன்பது (9) லட்சம் ஆகும். 25-12-2018 ஆம் தேதிக்கு முன்னர் நான் எதிரியிடம் பெற்றதாக கூறியுள்ள தொகை ரூபாய். (3) மூன்று  லட்சத்து (9) ஒன்பதாயிர் ஆகும். மேற்படி தொகைக்கும் இந்த காசோலை வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று என் புகாரில் கூறியுள்ளேன். மேற்படி தொகையை காசோலைகளின் தொகையுடன் சேர்த்தால் ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்து  ஒன்பதாயிரம் ஆயிரம் ஆகும். இதன் படி பார்த்தால் எனக்கு வரவேண்டிய தொகையை விட இரண்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து, நானூன்று நாற்பது ( 54,440) ரூபாய் வருகிறது. மூன்று லட்சத்து  ஒன்பதாயிரம்  ரூபாயை 25-12-2018 ஆம் தேதி அன்று நான் வாங்கியதை இவ்வழக்கிற்கு சம்மந்தம் உள்ளதால்தான் இவ்வழக்கில் கூறியுள்ளேன். நான் போலி கணக்கு காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. முருகேசன், வெங்கடாசலம், வெங்கடேசன், மற்றும் கோவிந்தன் ஆகியோரை எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் நான் காசோலை வழக்கு தாக்கல் செய்தபோதே எதிரி மீது ஒரே காரணத்திற்காக காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த இரண்டு வருடங்களாக மேற்படி நபர்களும் நானும், ஒன்றாக தான் வழக்குகளின் வாய்தாக்களுக்கு வந்து செல்கிறோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்களும் நானும் பல வருடங்களாக நண்பர்கள் என்றால் சரியல்ல. 13-09-2018-ஆம் தேதி எதிரியிடம் தகராறு செய்து பலவந்தமாக காசோலை பெற்றேன் என்றால் சரியல்ல. எனக்கு தரவேண்டிய தொகைக்கு எதிரி காசோலை தந்தார். 13-09-2018-ஆம் தேதி அன்று எதிரியின் இடத்திற்கு நான்  செல்லவில்லை. தனிப்பட்ட

எஸ்.டி.சி. எண். 02/2020

PW1-சீனிவாசன் த/பெ. ராஜு

தேதி- 15.03.2021

பக்க எண்- 2

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

(சி.எம்.பி. மனுக்கள் 39/202 மற்றும் 38/2021 மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 09/2020 மற்றும் 02/2020 இணைந்து விசாரிக்கப்படுகிறது. )

முறையில் சென்றுதான் காசோலை வாங்கினேன். 13-09-2018-ஆம் தேதி அன்று எதிரியை சந்தித்து பின்னர் எதிரியின் வீட்டுகாரரை நான் அடித்தேனா என்றால் அடிக்கவில்லை. சேலத்தில் நிறைய பழமண்டிகள் உள்ளன. எனக்கு தெரிந்து எதிரியின் மாங்காய் மண்டி பத்து வருடங்களாக இயங்கி வருகிறது. எதிரியின் பழ மண்டியில் சுமார் 70, 80 நபர்கள் வியாபாரம் செய்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கமிசன் அடிப்படையில் எதிரி மாங்காய்களை விற்று எனக்கு பணம் தருவார் என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரை மாங்காய் சீசன் இருக்கும். மாங்காயின் மார்க்கெட் நிலவரம் அதன் வரத்து மற்றும் உற்பத்தியை பொறுத்து தினசரி மாறும் என்றால் சரிதான். சேலத்தில் பல ரக மாங்காய்கள் விளைகின்றன. ஒவ்வொரு ரக மாங்காயும் ஒவ்வொரு விலையாகும். எந்த ரக மாங்காய்களை எதிரியிடம் வியாபாரம் செய்தேன் என்று குறிப்பிட்டு என் புகாரில் கூறவில்லை. எனக்கு சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது என்பது பற்றி என் புகார், பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் கூறவில்லை. மாங்காய்களை என் நிலத்தில் விளைவிப்பதற்குண்டான என் நிலம், அதன் சர்வே எண்., பயிர் விபரம் ஆகியவற்றை என் வழக்கில் கூறவில்லை. நிலம் சம்மந்தமான அடங்கல், பசலி ரசீது, ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை. எத்தனை கிலோ, அல்லது டன் மாங்காய்களை எதிரிக்கு சப்ளை செய்தேன் என்ற விபரத்தை என் வழக்கில் கூறவில்லை. கமிசன் தொகை எவ்வளவு என்று என் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேன். புகாரில் கூறவில்லை. எந்த ரக வாகனத்தில் எத்தனை லோடுகள், மாங்காய்கள் சப்ளை செய்தேன் என்று என் வழக்கில்கூறவில்லை. டிரிப் ரசீது, டோல் ரசீது, டீசல் ரசீது ஆகியவற்றை வழக்கில் தாக்கல் செய்யவல்லை. ரூ.2,72,082.00 ரூபாய் இவ்வழக்கை பொறுத்து எதிரி கொடுக்க வேண்டிய பாக்கி தொகையாக வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. என் மகன் ஜீவராமின் ஆதார்அட்டை, ஸ்மார்ட் கார்டு, அல்லது வங்கி கணக்கு புத்தகம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. என் அக்கா மகள் சுமித்ராவின் பெற்றோர் பெயர், விலாசம், குறிப்பிடவில்லை. அவர்களின் நிலம் பற்றிய விபரத்தையும் விலாசம் ஆகியவற்றை வழக்கில் கூறவில்லை. என் அக்கா மகள் சுமித்ராவின் பெயரில் நான் செய்த வியாபாரம் அனைத்தும் benami transaction என்றால் சரியல்ல. நான்

எஸ்.டி.சி. எண். 02/2020

PW1-சீனிவாசன் த/பெ. ராஜு

தேதி- 15.03.2021

பக்க எண்- 3

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

(சி.எம்.பி. மனுக்கள் 39/202 மற்றும் 38/2021 மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 09/2020 மற்றும் 02/2020 இணைந்து விசாரிக்கப்படுகிறது.)

சுமித்ராவிற்காக வியாபாரம் செய்வதற்கு ஆவண ரீதியாக அதிகாரம் பெற்றுள்ளேனா என்றால் பெறவில்லை. என் அக்கா பெயர் சித்ரா. மேற்படி விபரத்தை இப்போதுதான் முதன்முதலாக கூறுகிறேன். என் சாட்சி பட்டியலில் சுமித்ரா, ஜீவராம், சித்ரா ஆகியோரின் பெயரை சேர்க்கவில்லை. வெளிப்படையான ஆவணம் ஏதும் இன்றி பிறருக்காக வியாபாரம் செய்வோ, காசோலை வாங்கவோ, இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த ஒரே காரணத்திற்காகவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் போலி ஆவணங்கள் தயாரிப்பதில் வல்லவன் என்றால் சரியல்ல. என் புகார், பிரமாணபத்திரிக்கையில், வழக்கறிஞர் அறிவிப்பில் நான் பணத்தை திருப்பி கேட்டதாக எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் புகார், பிரமாண பத்திரிக்கையில், வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி சட்டப்படியாக எனக்கு கொடுக்கவேண்டிய கடனுக்காக காசோலை தந்தார் என்றும் குறிப்பிடவில்லை. இரண்டு வழக்குகளிலும், எதிரி எனக்கு தரவேண்டிய தொகையில் பகுதி தொகைக்காக காசோலைகள் தந்தார் என்று குறிப்பிடவில்லை. காசோலையை எந்த இடத்தில் எந்த நேரத்தில் எதிரி என்னிடம் கொடுத்தார் என்று குறிப்பிட்டு என் புகார், பிரமாண பத்திரிக்கையில், வழக்கறிஞர் அறிவிப்பில் கூறவில்லை. நான் பலவந்தமாக எதிரியிடம் காசோலை பெற்றதால்தான் மேற்படி விபரங்களை என் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2016-மற்றும் 2017 வருடங்களில் நான் என்ன வியாபாரம் செய்தேன் என்று என் வழக்கில் கூறவில்லை. 2018 செப்டம்பர் முதல் வாரத்தில் பெங்களூரை சேர்ந்த ஒரு உறசியுல்லா மீது எதிரியால் புகார் கொடுக்கப்பட்டு சேலம் சிசிபி போலிசில் விசாரணை நிலுவையில் இருந்தது எனக்கு தெரியம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் எனக்கு தெரியம் என்று என் பதில் அறிவிப்பில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல்வர் (பிரின்சிபல்) என்ற முறையில் மேற்படி விபரம் எனக்கு தெரிய வந்த பின்னர் உறசியுல்லா மீது சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் உறசியுல்லாவே யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி உறசியுல்லா என் நண்பர் முருகேசன் (ஆஜர் எதிரியின் மீது இன்னொரு காசோலை வழக்கு போட்ட நபர்) மூலம் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. முதல்வர்--முகவர் என்ற முறையில் மேற்படி உறசியுல்லாதான் எனக்கு பணம்

எஸ்.டி.சி. எண். 02/2020

PW1-சீனிவாசன்   த/பெ. ராஜு

தேதி- 15.03.2021

பக்க எண்- 4

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

(சி.எம்.பி. மனுக்கள் 39/202 மற்றும் 38/2021 மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 09/2020 மற்றும் 02/2020 இணைந்து விசாரிக்கப்படுகிறது. )

தரவேண்டிய நபர் என்றால் சரியல்ல. மேற்படி உறசியுல்லாவின் கணக்கு வழக்குகளை பார்த்த பின்னர்தான் எதிரி எனக்கு எவ்வளவு தொகை தரவேண்டியது என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. அவ்வாறு கணக்கு வழக்குகள் பார்க்காமல் எதிரியை பலவந்தப்படுத்தி ஒரு பெரிய தொகையை நிரப்ப செய்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு தரவேண்டி தொகைக்கு பில்கள் உள்ளன. மேற்படி பில்களை பொறுத்துதான் எதிரி எனக்கு காசோலைகள் கொடுத்தார். 15-11-2018-ஆம் தேதியன்று நானும் சில நபர்களும் சேர்ந்து எதிரியின் மீது தமிழக முதல்வருக்கு புகார் கொடுத்தோம் என்றால் நான் கொடுக்கவில்லை. மேற்படி புகாரில் பிறநபர்களுடன் சேர்த்து நானும் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகார் சம்மந்தமாக சேலம் சிசிபி போலிசில் இரண்டு மூன்று முறை என்னை அழைத்து விசாரித்தனர் என்றால் போலிசார் என்னை அழைத்தனர் நான் செல்லவில்லை. மேற்படி புகாரில் 10-11-2018-அன்றே வங்கி அதிகாரிகள் மூலமாக எதிரி ஸ்டாப் பேமெண்ட் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஸ்டாப் பேமெண்ட் குறிப்பு கொடுத்த விபரம் தெரிந்த பின்னர்தான் வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்தினேன் என்றால் சரியல்ல. எதிரி கூறியதன் பேரில்தான் காசோலையை வசூலுக்கு செலுத்தினேன். அவ்வாறு எதிரி ஸ்டாப் பேமெண்ட் கொடுத்த விபரம் தெரிந்த பின்னரும், வசூலுக்கு செலுத்தியது தவறு என்றால் சரியல்ல. சேலம் சிசிபி போலிசில் நான் முன்னே நின்று மற்ற விவசாயிகளுக்காக புகார் கொடுத்தேனா அல்லது மற்றவருடன் உடன் இருந்தேனா என்றால் நான் அங்கு செல்லவில்லை. தமிழக முதல்வருக்கு நான் கொடுத்த புகாரில் எதிரியின் மண்டியில் சுமார் 70 நபர்கள் வியாபாரம் செய்கின்றனர் என்ற விபரத்தை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்குபின் முரணாக பேசுகிறேன் என்றால் சரியல்ல. சேலம் சிசிபி போலிசார் மூலம் ஆன பைசலில் நான் உட்பட 13 நபர்கள் எதிரியிடம் இருந்து மொத்தம் ரூபாய் 50 லட்சம் பெற்றுக்கொண்டோம் என்றால் எதிரி எனக்கு தரவேண்டிய தொகையில் ஒரு சிறு தொகையை கொடுத்தார். எதிரி காசோலைக்கு ஸ்டாப் பேமெண்ட் குறிப்பு கொடுத்ததன் பேரில் தான் சேலம் சிசிபி போலிசில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சிசிபி போலிசில் ஏற்கெனவே பைசல் செய்து முழு

(சி.எம்.பி. மனுக்கள் 39/202 மற்றும் 38/2021 மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 09/2020 மற்றும் 02/2020 இணைந்து விசாரிக்கப்படுகிறது. )

தொகையையும் எதிரியிடம் பெற்றுக்கொண்டேன் என்றாலும், இதே வழக்கு மூலத்தை வைத்து தற்போது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. ஒரே வழக்கு மூலத்தை இரண்டாம் முறையாக நீதிமன்றத்தில் பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. 30-10-2018-தேதி முதல் 02-11-2018-தேதி வரை பிற நபர்களுடன் சேர்ந்து எதிரியின் இடத்திற்கு சென்று சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் வகையில் எதிரியை பலவந்தப்படுத்தி வழக்கு காசோலையை கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. விவசாயிகள் என்ற போர்வையில் காவல் துறையினருக்கு அழுத்தம் கொடுத்து வழக்கு காசோலைகளை பெற்றேன் என்றால் சரியல்ல. காசோலைகளை வசூலுக்கு செலுத்த மாட்டோம் என்று கூறி செக்யூரிட்டிக்காக எதிரியிடம் இருந்து பெற்றோம் என்றால் சரியல்ல. எஸ்டிசி 09/2020-இல் வாசாஆ 4- பதிலறிவிப்பில் 03-10-2018-அன்று இரண்டாம் காசோலையை எதிரி கொடுத்தார் என்று கூறியுள்ளேன். எஸ்டிசி 09/2020 வாசாஆ 5 சட்ட அறிவிப்பில் பாரா 5-இல் இரண்டாம் காசோலை 03-10-2018 இல் எதிரி எனக்கு இரண்டாம் காசோலை கொடுத்ததாக கண்டுள்ளது. என்னுடைய இரண்டு வழக்குகளிலும், புகார், சட்ட அறிவிப்பில் 03-10-2018 என்பதை திருத்தம் செய்து 03-11-2018 என்று மாற்றியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு காசோலைகளையும் எதிரியிடம் பலவந்தமாக பெற்றேன் என்றால் சரியல்ல. நான் முதல்வர் எனும் பட்சத்தில் உறசியுல்லாதான் எனக்கு பணம் தரவேண்டியுள்ளது என்றாலும், எதிரிக்கு பணம் தரவேண்டிய கடப்பாடு இல்லை என்றாலும் சரியல்ல. ஏற்கெனவே பைசல் செய்து பணத்தை எதரியிடம் பெற்றுக்கொண்டதால் முடிந்துபோன வழக்கு மூலத்தை வைத்து இரண்டாம் முறையாக இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. காசோலையில் கண்டுள்ள தொகை எனது நிர்பந்தத்தின் பெயரில் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வரவேண்டிய தொகைகையதான் நான் கேட்க முடியும் என்றாலும், மூன்றாம் நபர்களுக்காக நான் தொகையை கேட்க முடியாது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. )

(மறுவிசாரணை இல்லை)

ஒம்/ எம்.ஏ.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.